**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 132** **நாள்: 16.09.2016**

## சென்னைப் பள்ளிகளில் உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் 10 மற்றும் 12ம் வகுப்பு அரசு பொதுத்தேர்வில் முழு மதிப்பெண் மற்றும் 100% தேர்ச்சி பெற வைத்த 32 தலைமையாசிரியர்கள் மற்றும் 888 ஆசிரியர்களுக்கு ரூ.14,87000/–க்கான ரொக்கப்பரிசை மாண்புமிகு பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் அவர்கள் வழங்கினார்.

------

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, மாண்புமிகு பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திரு. சைதை துரைசாமி அவர்கள் மற்றும் ஆணையாளர் முனைவர். தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்களின் தலைமையில் பெருநகர சென்னை மாநகராட்சி சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

சென்னைப் பள்ளிகளில் உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் 10 மற்றும் 12ம் வகுப்பு அரசு பொதுத்தேர்வில் முழு மதிப்பெண் மற்றும் 100% தேர்ச்சி பெற உக்கப்படுத்திய 32 தலைமையாசிரியர்கள் மற்றும் 888 ஆசிரியர்களுக்கு ரூ.14,87000/–க்கான ரொக்கப்பரிசினை இன்று (16.09.2016) செனாய்நகரில் அமைந்துள்ள அம்மா அரங்கில் மாண்புமிகு பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திரு.சைதை துரைசாமி அவர்கள், ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்களின் முன்னிலையில் வழங்கினார்.

பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் மாணவர்களின் கல்வித்தரத்தை மேம்படுத்துவதற்கு கல்வி செயல்பாடுகளில் மாணாக்கர்களை சிறந்த மாணவர்களாக உருவாக்கிட காரணகர்த்தாவாக இருக்கும் தலைமையாசிரியர்கள் மற்றும் ஆசிரியர்களை ஊக்கப்படுத்தி பாராட்டி பெருமைப்படுத்தி வருகிறது.

2015–16ம் கல்வியாண்டில் 12ம் வகுப்பு அரசு பொதுத்தேர்வு எழுதிய 5859 மாணவ, மாணவியர்களில் 5051 மாணவ/மாணவியர்களை தேர்ச்சி பெற வைத்துள்ளனர். இந்த கல்வியாண்டில் தேர்ச்சி சதவீதம் 86.21 விழுக்காடு ஆகும். இது கடந்த ஆண்டை விட 1 சதவிகிதம் அதிகம் ஆகும். 41 மாணவ/மாணவியர்கள் பாடவாரியாக 200/200 மதிப்பெண்களும், 61 மாணவ/மாணவியர்கள் 1100க்கும் மேற்பட்ட மதிப்பெண்களும், 326 மாணவ/மாணவியர்கள் 1000க்கு மேற்பட்ட மதிப்பெண்களைப் பெற்று தேர்ச்சி பெற வைத்துள்ளனர்.

12ம் வகுப்பு அரசு பொதுத்தேர்வில் தரவரிசை அடிப்படையில் முதல் இடத்தைப் பிடித்த கோயம்பேடு சென்னை மேல்நிலைப் பள்ளி, லாயிட்ஸ் சாலை சென்னை மேல்நிலைப் பள்ளி, சுப்பராயன் தெரு சென்னை மேல்நிலைப் பள்ளி ஆகிய மூன்று பள்ளிகளுக்கு ரூ.5000/– ரொக்கப்பரிசு மற்றும் கேடயமும், இரண்டாம் இடம் பிடித்த மார்க்கெட் தெரு சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளிக்கு ரூ.3000/–ம், மூன்றாம் இடம் பிடித்த புல்லா அவென்யூ சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளிக்கு ரூ.2000/–க்கான ரொக்கப்பரிசுகள் வழங்கப்பட்டது.

12ம் வகுப்பு பொதுத்தேர்வில் கடந்த கல்வியாண்டை விட தற்பொழுது 2015–2016ம் கல்வியாண்டில் தேர்ச்சி விழுக்காடு அதிகரித்த முதல் மூன்று இடங்களைப் பெற்ற பள்ளிகளான கல்யாணபுரம் சென்னை மேல்நிலைப்பள்ளிக்கு ரூ.5000/–ம், லாயிட்ஸ் சாலை சென்னை மேல்நிலைப்பள்ளிக்கும் ரூ.3000/–ம், பந்தர் கார்டன் சென்னை ஆண்கள் மேல்நிலைப்பள்ளிகளுக்கு ரூ.2000/–க்கான ரொக்கப்பரிசுகளை மாண்புமிகு மேயர் அவர்கள் வழங்கினார்.

ஒவ்வொரு பள்ளி வாரியாக 12ம் வகுப்பு பாடப்பிரிவில் 100 சதவீதம் மதிப்பெண்கள் பெற வைத்த 210 ஆசிரியர்களுக்கு தலா ரூ.1500/– வீதம் ரூ.3,15,000/– மதிப்பிலான ரொக்கப்பரிசு, 12ம் வகுப்பில் 100 சதவீதம் தேர்ச்சி பெற ஊக்கப்படுத்திய 41 ஆசிரியர்களுக்கு தலா ரூ.1500/– வீதம் ரூ.61,500/– மதிப்பிலான ரொக்கப்பரிசுகளும் வழங்கப்பட்டது.

2015–16ஆம் கல்வி ஆண்டில் 10ஆம் வகுப்பு பொதுத்தேர்வு எழுதிய 6608 மாணவ, மாணவியரில் 6273 மாணவர்கள் தேர்ச்சி பெற வைத்துள்ளனர். தேர்ச்சி சதவிகிதம் 95 சதவிதம் ஆகும். இது கடந்த ஆண்டைவிட 3 சதவிகிதம் அதிகம். 19 பள்ளிகள் 100 சதவீதம் தேர்ச்சி விழுக்காட்டை பெற்றுள்ளது.

10ம் வகுப்பு அரசு பொதுத்தேர்வில் தரவரிசை அடிப்படையில் முதல் இடத்தைப் பிடித்த கொடுங்கையூர் சென்னை உயர்நிலைப் பள்ளி, எருக்கஞ்சேரி சென்னை உயர்நிலைப் பள்ளி, மணிகண்டன் தெரு சென்னை உயர்நிலைப் பள்ளி, ஆஞ்சநேய நகர் சென்னை தெலுங்கு உயர்நிலைப் பள்ளி, சிந்தாதிரிபேட்டை சென்னை உயர்நிலைப் பள்ளி, கொய்யாத்தோப்பு சென்னை உயர்நிலைப் பள்ளி, மார்கெட் தெரு சென்னை பெண்கள் மேல்நிலைப் பள்ளி, குக்ஸ் சாலை சென்னை உயர்நிலைப் பள்ளி, மெக்னிக்கல்ஸ் சாலை சென்னை உயர்நிலைப் பள்ளி, புல்லா அவென்யூ சென்னை மேல்நிலைப் பள்ளி, ஆயிரம் விளக்கு சென்னை உயர்நிலைப் பள்ளி, நுங்கம்பாக்கம் சென்னை பெண்கள் மேல்நிலைப் பள்ளி, வி. பி. கோயில் தெரு சென்னை உயர்நிலைப் பள்ளி, வன்னிய தேனாம்பேட்டை சென்னை உயர்நிலைப் பள்ளி, கேனால் பேங்க் சென்னை உயர்நிலைப் பள்ளி, கே.பி. தெரு சென்னை உயர்நிலைப் பள்ளி, கன்னியப்பா நகர் சென்னை உயர்நிலைப் பள்ளி, ஜாபர்கான்பேட்டை சென்னை உயர்நிலைப் பள்ளி, காமராஜ்

அவென்யூ சென்னை உயர்நிலைப் பள்ளி ஆகிய 19 சென்னைப் பள்ளிகளுக்கு தலா ரூ.5000/– வீதம் ரூ.95,000/–க்கான ரொக்கப்பரிசுகள் மற்றும் கேடயமும், இரண்டாம் இடம் பிடித்த சைதாப்பேட்டை சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளிக்கு ரூ.3000/–க்கான ரொக்கப்பரிசும், மூன்றாம் இடம் பெற்ற அயனாவரம் சென்னை மேல்நிலைப்பள்ளிக்கு ரூ.2000/–க்கான ரொக்கப்பரிசு என மொத்தம் 22 பள்ளிகளுக்கு ரூ.1,00,000/– மதிப்பிலான ரொக்கப்பரிசுகள் வழங்கப்பட்டது.

10ம் வகுப்பு பொதுத்தேர்வில் கடந்த கல்வியாண்டை விட தற்பொழுது 2015–2016ம் கல்வியாண்டில் தேர்ச்சி விழுக்காடு அதிகரித்து முதலிடம் பெற்ற கோட்டூர் சென்னை உயர்நிலைப்பள்ளிக்கு ரூ.5000/–மும், இரண்டாமிடம் பெற்ற கல்யாணபுரம் சென்னை மேல்நிலைப்பள்ளிக்கு ரூ.3000/–மும், மூன்றாமிடம் பெற்ற வேளச்சேரி சென்னை மேல்நிலைப்பள்ளிக்கு ரூ.2000/–க்கான ரொக்கப்பரிசு என மொத்தம் 3 பள்ளிகளுக்கு ரூ.10,000/– மதிப்பிலான ரொக்கப்பரிசுகள் வழங்கப்பட்டது.

மேலும், ஒவ்வொரு பள்ளி வாரியாக 10ம் வகுப்பு பாடப்பிரிவில் 100 சதவீதம் தேர்ச்சி பெற ஊக்கப்படுத்திய 559 ஆசிரியர்களுக்கு தலா ரூ.1500/– வீதம் ரூ.8,38,500/–க்கான ரொக்கப்பரிசும், 10ம் வகுப்பு பாடங்களில் 100 சதவீத மதிப்பெண்கள் பெற ஊக்கப்படுத்திய 78 ஆசிரியர்களுக்கு தலா 1500/– வீதம் ரூ.1,17,000/–க்கான ரொக்கப்பரிசு என மொத்தம் 637 ஆசிரியர்களுக்கு
ரூ.9,55,500/–க்கான ரொக்கப்பரிசுகளும் வழங்கப்பட்டது.

ஆக மொத்தம் 32 தலைமையாசிரியர்கள், 888 ஆசிரியர்களுக்கு ரூ.14,87,000/– மதிப்பிலான ரொக்கப்பரிசினை மாண்புமிகு பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், துணை ஆணையர் (கல்வி) திரு.எம்.கோவிந்த ராவ், இ.ஆ.ப., அவர்கள், கல்வி அலுவலர் திருமதி.டி.ரஞ்சனி அவர்கள், கூடுதல் கல்வி அலுவலர் திரு.சுப்ரமணியன் அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்கள், ஆசிரியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி.**